**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 41/2021**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பொன்னுச்சாமி | Caste | : |
| Father 's Name / Husband Name | : இருளாண்டிதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(02.07.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெரியபூலாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் EX ஊராட்சிமன்ற தலைவராக வேலை செய்து வந்தேன். அ.சா.1க்கும் 1ம் எதிரிக்கும் 2007ம் வருடம் திருமணம் நடைபெற்றது. அதன் வழியாக இரண்டு ஆண்குழந்தைகள் உள்ளனர். இதற்கிடையில் இருவருக்கும் அடிக்கடி மனதாஸ்பம் ஏற்பட்டு வந்தது. அதனால் குடும்ப நபர்களும் ஊர்பெரியவர்களும் பைசல் பேசி இருவரிடமும் இருந்த கருத்து வேறுபாடு மாறவில்லை. அதனால் 1ம் எதிரி மனம் உடைந்து வெளியூருக்கு சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 2007வது வருடம் தை மாதம் பேரையூரில் உள்ள முருகன் கோவிலில் வைத்து என் முன்பே திருமணத்தை நடத்தி வைத்தோம். திருமணத்தில் பெண்ணிற்கு 20 பவுன் நகையும் மாப்பிள்ளைக்கு 2 பவுன் நகையும் 2லட்சம் பெருமானம் உள்ள

பண்டபாத்திரமும் திருமண செலவிற்கு ரூ.5 லட்சம் வரை செலவு செய்தார்கள். திருமணத்திற்கு பின்பு கூட்டுக்குடும்பமாக இருந்து 2 ஆண் குழந்தைகளும் பிறந்தனர். திருமணமாகி சில நாட்கள் கழித்து மேலும் வரதட்சணையாக 25 பவுன் நகையும் 3 லட்சம் பணமும் கேட்டு பூபதி அவரது குடும்பத்தார்கள் கொடுமை செய்ததாகவும் அதில் பாண்டியம்மாள் தந்தை பால்ராஜ் பெண்ணிடம் நீதான் எனக்கு திருமணம் செய்து வைத்தாய் நீயே வந்து கேள் என்று சொன்னார். இதற்கு நான் நல்லமாப்பிள்ளை என்று தான் பெண் கேட்டு வந்தேன் என்று சொல்லி எதிரியை சத்தம் போட்டு வாழச் சொன்னேன். அதன் பிறகு பூபதிராஜா அதே ஊரைச் சார்ந்த ஜெயராணி என்ற பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்துக் கொண்டு பாண்டியம்மாளை விவாகரத்து செய்ய கையெழுத்து போடுமாறு கொடுமைசெய்ததாகவும் கடந்த 08.10.2017ம் ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொண்டு ஊரைவிட்டு ஓடிவிட்டதாகவும் அதற்கு பூபதிராஜா குடும்பத்தினர் துணையாக இருந்ததாக பாண்டியம்மாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக கேள்விபட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**மறுவிசாரணை.** இல்லை